**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பொருத்துனர் பயிற்சி பெற்று வருகின்ற காது கேளாத மற்றும் வாய்பேசாத மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூ.300/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்துதல் மற்றும் அரசு வழங்கும் இலவச சீருடைகள் தைக்க தையற் கூலி ஒரு நபருக்கு ரூ.300/– அளித்தல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண்: 26** **நாள் 30.08.2016**

**துன்முகி–ஆவணி 14,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை எண் 139, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25.09.2012.
2. அரசாணை எண் 108, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25.03.2013.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண் 6254/இவாததி/2015, நாள் 20.10.2015.

----------

**ஆணை:**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கு 2012ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் பயிற்சி உதவித் தொகையினை ஒரே சீராக வருமான உச்சவரம்பின்றி மற்றும் இன வேறுபாடின்றி ரூ.300/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாணையின்படி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவ மற்றும் மாணவியர்கள் கல்வி உதவித் தொகையினை பெற்று வருகின்றனர் எனவும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அரசு விலையில்லா இலவச சீருடைகள் வழங்குவதுடன், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயில்பவர்களுக்கு சீருடைகள் தைப்பதற்கு தையல் கூலியாக (ஒரு ஜதை முழுக்கால் சட்டை மற்றும் சட்டை (Pant & Shirt) ரூ.150/– வீதம் 2 ஜதைக்கு ரூ.300/– வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளபடியால், பயிற்சி பெறும் மாணவர்கள் ரூ.300/– தையற் கூலியாக பெற்று வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2015–2016ஆம் கல்வியாண்டில் காது கேளாத மற்றும் வாய்பேசாத பொருத்துனர் பயிற்சி பயின்று வருகின்ற 21 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மாதந்தோறும் வழங்கப்படும் ரூ.300/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கியும், தையற்கூலியாக ரூ.300/– வழங்கியும் ஆணை வழங்குமாறும், இச்செலவினத்திற்கென நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 2015–2016ஆம் கல்வியாண்டில் காது கேளாத மற்றும் வாய்பேசாத பொருத்துனர் பயிற்சி பெற்றுவருகின்ற 21 மாணவர்களுக்கு மாதந்தோறும் வழங்கிவரும் கல்வி உதவித் தொகையை ரூ.300/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தி வழங்கியும் தையற்கூலியாக 1 நபருக்கு 1 ஜதை ரூ.150/– வீதம் 2 ஜதை சீருடைகள்

[த.பி.பா.]

தைக்க ரூ.300/– வழங்கியும் ஆணையிடுகின்றது. மேலும், 21 நபர்களுக்கு ரூ.1,26,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) கல்வி உதவித் தொகையாகவும் மற்றும் 21 நபர்களுக்கு 2 ஜதை சீருடைகளுக்கான தையற்கூலியாக ரூ.6,300/– (ரூபாய் ஆறாயிரத்து முந்நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பெற்று வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது:-

(i) 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் I திட்டத்தில் சேராதது AE பார்வையற்ற முதியோருக்கான இலகுரகப் பொறியியல் கல்வித் திட்டம்–12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும்–09 – ஏனையவை. ரூ.1,26,000/–

(கு.தொ.கு 2235–02–101–AE–1295)

(ii) 2235–02–101–AE-24 – பொருள்களும் வழங்கலும் ரூ.6,300/–

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.57,300/– வரும் 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து நிதி (ச.ந.) துறைக்கு அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற எண் 37264/நிதி(சந)/2016, நாள் 19.08.2016–ன்படி மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் (ASL No.) 720 (எழுநூற்று இருபது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

நிதித் (ச.ந.) [வ.செ.பொ–II] துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்